# Miriam's Letter
## (மிரியமின் கடிதம்)

| Prose | தமிழாக்கம் |
|---|---|
| **Warming up:**<br>Here is an interesting conversation between Rohit and his mother<br>Mother : Rohit ! Rohit! Come on! Your breakfast is ready! Where are you?<br>Rohit : Mom! I'm coming wait ...<br>Mother : Oh! You are with your cell phone!<br>Rohit : I have an interesting message! Come and read it! (Mother reads the message)<br>Mother : Oh! I can't make head or tail of it!<br>Rohit : The message is **"cud u pls jn 2morrow for d b'day party"**<br>Mother : You have the world in your palm!<br>Rohit : Certainly mom! We do not have time at all.<br>Mother : (Nostalgically) In our days, we used to be waiting for the postman's arrival. He used to read to those who couldn't read and write letters.<br>Rohit : In today's fast track world, we are hard pressed for time! Please understand!<br>Mother : Letters are like messengers. They carry personal, casual and sentimental messages. Today's SMS is more mechanical. The SMS has only evolved from the age old practice of writing letters.<br>Rohit : Mom! If you don't adopt modern technology, you will only be a spectator in the march of civilization.<br>Mother : I would like to be a spectator only. The love, the warmth and the personal touch are lacking. mmmm…. do you write letters to your dear ones? | **ஆயத்தப்படுத்துதல்:**<br>இதோ ஒர் ஆர்வமூட்டும் உரையாடல் - ரோஹித்துக்கும் அவன் அம்மாவுக்கும் இடையில்.<br>**அம்மா:** ரோஹித்! ரோஹித்! இங்க வா! உன் காலை உணவு தயாராக இருக்கிறது! நீ எங்க இருக்க?<br>**ரோஹித்:** அம்மா! கொஞ்சம் பொறுங்க! நான் வரேன்!<br>**அம்மா:** ஓ! நீ உன் கைபேசியோடு இருக்கிறாயா?<br>**ரோஹித்:** எனக்கு ஒரு சுவையான குறுஞ்செய்தி வந்துள்ளது. வாங்க வந்து படியுங்க!(அம்மா படிக்கிறாள்)<br>**அம்மா:** ஓ! எனக்கு தலையும் புரியவில்லை! வாலும் புரியவில்லை!<br>**ரோஹித்:** இதுதான் குறுஞ்செய்தி. "நாளை நடைபெறும் அந்த பிறந்தநாள் விருந்தில் கலந்து கொள்ள முடியுமா?"<br>**அம்மா:** உலகையே உங்கள் கைகளில் வைத்திருக்கிறீர்கள்<br>**ரோஹித்:** நிச்சயமாக அம்மா! எங்களுக்கு நேரமே கிடைக்கவில்லை.<br>**அம்மா:** (ஏக்கத்தோடு) எங்கள் காலங்களில் தபால்காரருக்காக காத்திருப்போம். அவர்தான் எழுதப்படிக்கத் தெரியாதவர்க்கெல்லாம் படித்துக் காட்டுவார்.<br>**ரோஹித்:** இந்த அவசர உலகில் நேரம் இல்லாமல் தவிக்கிறோம். தயவு செய்து புரிஞ்சுக்கோங்க!<br>**அம்மா:** கடிதங்கள் இறைத்தூதர்கள் போல. அவைகள் சொந்த விசயங்கள், சாதாரண விசயங்கள் மற்றும் உணர்வுப் பூர்வமான விசயங்களைத் தாங்கி வருகின்றன. இன்றைய குறுஞ்செய்திகளோ இயந்திரத்தனமானவை. பழங்கால கடிதம் எழுதும் பழக்கத்தின் பரிணாம வளர்ச்சியே குறுஞ்செய்திகள்.<br>**ரோஹித்:** அம்மா நவீன தகவல் தொழில் நுட்பத்திற்கு உங்களை நீங்கள் தயார் செய்து கொள்ளாவிட்டால் வளர்ந்துவரும் நாகரீக ஓட்டத்தில் நீங்கள் வெறும் பார்வையாளராக இருந்து விட வேண்டியதுதான்<br>**அம்மா:** நான் வெறும் பார்வையாளராகவே இருந்துவிட்டு போகிறேன். இந்த அன்பு, குதூகலம், தனிமனித அக்கறை, பாசம் இதெல்லாம் குறைகிறதே. ம்..ம்.. உனது அன்புக்குரியவர்களுக்கு கடிதங்கள் எழுதியதுண்டா? |
| The story we are going to read is about a "Letter" - a father waiting for a letter from his daughter. | நாம் படிக்கவிருக்கும் இந்த கதை ஒரு கடிதம் தொடர்புடையது. அது ஒரு தந்தை எதிர்நோக்கி காத்திருக்கும் அவர் மகளின் கடிதம். |
| In the grey sky of early dawn, stars still glowed. An old man was walking through the town, drawing his tattered cloak closer to shield his body from the cold and biting wind. Except for the occasional bark of a dog, or the screech of a bird disturbed before its time, the whole town was wrapped in deathly silence. Most of its inhabitants were still in the arms of sleep. The old man, shivered at times but plodded on till he came out of the town-gate on to a straight road. On one side of the road was a row of trees, on the other side the town's public garden. At the end of the garden stood a handsome building of the newest style and the light gleamed the crevices of its closed doors and windows. | சாம்பல் நிற அதிகாலை வானத்தில் விண்மீன்கள் இன்னும் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. கடித்து தின்னும் கடுங்குளிர் காற்று உடலைத் தாக்காதவாறு கிழிந்த நீண்ட மேலங்கியை அணிந்து கொண்டு அந்த ஊரின் வழியே ஒரு முதியவர் நடந்து வந்து கொண்டிருந்தார். எப்போதாவது கேட்கும் நாய் குரைப்பு மற்றும் முன்னதாகவே எழுந்த பறவைகளின் கிறிச் சத்தம் தவிர அந்த நகரத்தை மயான அமைதி சூழ்ந்திருந்தது. அந்நகரவாசிகள் பெரும்பாலானோர் இன்னும் உறக்கத்தில்தான் இருந்தனர். அந்த வயதான மனிதர் அடிக்கடி குளிரில் நடுங்கினாலும் அந்த நேர் சாலையில் உறுதியுடன் நடந்து சென்று அந்த நகரத்தின் வாசலைச் தாண்டி சென்றார். சாலையின் ஒரு பக்கத்தில் மரங்கள் வரிசையாகவும் மற்றொரு பக்கத்தில் நகரத்தினுடைய பூங்காவும் இருந்தன. புதிய தோரணையில் கட்டப்பட்டிருந்த அழகான கட்டிடம் ஒன்று அந்த பூங்காவின் கடைசியில் இருந்தது. மூடியிருந்த அந்த கட்டிடத்தின் கதவு மற்றும் ஜன்னலின் இடுக்கிலிருந்து பிரகாசமான வெளிச்சம் தெரிந்தது. |

| | |
|---|---|
| As soon as he saw the wooden arch of this building, the old man was filled with hope and joy. On the arch hung an old board with the newly painted letters, "post office". The old man went in quietly and squatted on the veranda. The voices of two or three people busy with their routine work could be **faintly** heard through the wall. | கட்டிடத்தின் மரத்தாலான மேல்வளைவினை பார்த்தவுடன் அந்த முதியவர் புதிய நம்பிக்கை பெற்று பரவசமடைந்தார். அந்த மேல் வளைவில் பழைய பலகை ஒன்று 'அஞ்சல் அலுவலகம்' என்ற புதிய எழுத்துக்களுடன் தொங்கிக் கொண்டிருந்தது. அந்த முதியவர் அமைதியாக உள்ளே சென்று வராண்டாவில் அமர்ந்தார். தங்கள் அன்றாட வேலையில் மூழ்கியிருந்த இரண்டு அல்லது மூன்று பேருடைய பேச்சுக்குரலை சுவர் வழியே மெலிதாக கேட்க முடிந்தது. |
| "Police Superintendent", a voice called sharply. The old man stared at the sound, but composed himself again to wait. But for the faith and love, that warmed him, he could not have borne the bitter cold. | 'காவல்துறை கண்காணிப்பாளர்' என்று ஒரு குரல் தெளிவாக அழைத்தது. முதியவர் அந்தக் குரல் வந்த திசையை ஆவலோடு நோக்கினார். ஆனால் பின்னர் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு மீண்டும் காத்திருந்தார். கடுங்குளிரை அவரால் தாங்கமுடியாது ஆனால் நம்பிக்கையும் பாசமும் அவருக்கு கதகதப்பைக் கொடுத்து கொண்டிருந்தன. |
| Name after name rang out from within as the clerk read out the English addresses in the letters and flung them to the waiting postmen. From long practice he had acquired great speed at reading out the titles -Commissioner, Superintendent, Diwan Sahib, and librarian-in flinging the letters out. | அந்த அலுவலகத்தின் எழுத்தர் அந்தக் கடிதங்களிலிருந்த ஒவ்வொரு பெயரையும் அதில் உள்ள ஆங்கில முகவரியையும் உரக்க படித்து அவற்றைக் காத்திருந்த தபால் காரரிடம் கொடுத்துக் கொண்டிருந்தார். நெடுநாள் பழக்கத்தின் காரணமாக அவரால் அந்த பெயர்களை மிக விரைவாக ஆணையர், கண்காணிப்பாளர், திவான் ஷாகிப் மற்றும் நூலகர் என வாசித்துக் கொண்டே கொடுக்க முடிந்தது. |
| In the midst of this procedure a jesting voice from inside called, "Coachman Ali!" | இந்த செயல்களுக்கு இடையில் அலுவலகத்தின் உள்ளிருந்து அலட்சியமான குரல் ஒன்று 'வண்டிக்காரன் அலி' என்றது. |
| The old man got up, raised his eyes to heaven in gratitude and stepping forward put his hands to the door | அந்த முதியவர் எழுந்தார். நன்றிப்பெருக்குடன் விண்ணைப் பார்த்து கண்களை உயர்த்தியபின் முன்னோக்கி நகர்ந்து கதவின் மீது கைகளை வைத்தார். |
| "Gokul Bhai!" "You called out Coachman Ali's name, didn't you? Here I am. I have come for my letter." | "கோகுல் பாய்!" "வண்டிக்காரன் அலி என்ற பெயரை நீங்கள் சொன்னீர்கள் இல்லையா? இதோ நான் இருக்கிறேன். எனது கடிதத்திற்காகதான் நான் வந்திருக்கிறேன்." என்றார். |
| "Yes. Who is there?" | "ஆமாம். யார் அங்கே?" (என்றார் அஞ்சல் அலுவலர்) |
| "It's an old man, sir, who worries us by calling everyday for letters that never come," said the clerk to the postmaster. | "அது ஒரு முதியவர் ஐயா, அவர் வராத தபாலுக்காக தினமும் நம்மை தொந்தரவு செய்பவர்." என்று எழுத்தர் அஞ்சல் அலுவலரிடம் சொன்னார். |
| The old man went back slowly to the bench on which he had been **accustomed to** sit for five long years. | அந்த முதியவர் ஐந்து ஆண்டுகளாக அமர்ந்து பழகிப்போன அந்த அமரும் பலகைக்கு மெதுவாக திரும்பிச் சென்றார். |
| Ali had been a clever hunter once. As his skill increased, so did his love for the hunt. Soon it became an **obsession.** Not a day passed without Ali setting out with his gun. People said that when Ali sighted the earth-brown partridge, almost invisible to other eyes, the poor bird, was as good as in his bag. | 'அலி' ஒரு காலத்தில் மிகவும் திறமையான வேட்டைக்காரர் அவரது வேட்டையாடும் திறன் அதிகரித்த போது வேட்டை மீதிருந்த ஆர்வமும் அவருக்கு அதிகரித்தது. மிக விரைவில் அந்த ஆர்வம் ஆசையாக மாறியது. அவரது துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வெளியில் செல்லாமல் ஒரு நாளும் கழிந்ததில்லை. எவர் கண்களுக்கும் தட்டுபடாத சாம்பல் நிற பேட்ரிஜ் பறவை (காடை) அலியின் பார்வையில் பட்டால் உடனே (அலியால் சுடப்பட்டு) அவரது பைக்குள் சென்று விடும் என்று அந்த ஊர் மக்கள் சொல்வார்கள். |
| His sharp eyes saw the hare crouching even when the dogs failed to see the creature cunningly hidden in the yellow brown scrub. Ali's eyes would watch the sight of his ears; and in another moment it was dead. Besides this, he would often go out with his friends, the fishermen. | மஞ்சள் மற்றும் சாம்பல் நிறப் புதருக்குப் பின்னால், நாய்கள் கூட கண்டுபிடிக்க முடியாதபடி பதுங்கியிருக்கும் முயலை அலியின் கூரிய கண்கள் கண்டுபிடித்து விடும். அலி அந்த முயலின் காதுகளைப் பார்த்த அடுத்த நொடி அது செத்து விடும். இதற்கிடையே அவர் அடிக்கடி தன் மீனவ நண்பர்களுடன் கடலுக்கும் சென்று விடுவார். |
| But when the evening of his life was drawing near, he left his old ways and suddenly took a new turn. His only child, Miriam married and left him. She went off with a soldier to his regiment in Punjab, and for the last five years he had no news of his daughter, for whose sake alone he dragged along a cheerless existence. | ஆனால் தன் வாழ்நாளின் அந்திப் பொழுது நெருங்கியபோது அவர் தனது பழைய நடவடிக்கைகளைக் கைவிட்டுவிட்டு திடீரென ஒரு புதிய அத்தியாயத்தினைத் தொடங்கினார். அவரது ஒரே குழந்தை, மிரியம் திருமணம் செய்து கொண்டு பிரிந்து விட்டாள். ராணுவ வீரனான தனது கணவருடன் பஞ்சாப் ரெஜிமண்டுக்கு அவள் சென்றுவிட்டாள். கடந்த ஐந்து ஆண்டுகளாக அவர் யாருக்காக வாழ்ந்து கொண்டிருந்தாரோ அந்த மகள் குறித்து ஒரு தகவலும் இல்லை. |

| | |
|---|---|
| Now he understood the meaning of love and separation. He could no longer enjoy the sportsman's pleasure and laughter at the bewildered terror of the young partridges bereft of their parents. | இப்பொழுதுதான் பாசம் மற்றும் பிரிவின் பொருளை அவர் உணர்ந்து கொண்டார். இளம் பேட்ரிஜ் பறவைகளை அவைகளின் பெற்றோர்களிடமிருந்து பிரித்து எடுத்துக் கொண்டு சிரிக்கும் அந்த பயங்கரத்தனத்தை, வீரத்தனத்தை அவரால் இப்பொழுது ரசிக்க முடியவில்லை. |
| He gave up hunting and spent all his time reflecting upon his life and admiring the beauty of the lush green fields. He reflected deeply, and came to the conclusion that the whole universe is built up through the love and that the grief of separation is inescapable. And seeing this, he sat down under a tree and wept bitterly. From that day he rose at four o' clock each morning to walk to the post office. In his whole life, Ali had never received a letter, but with a devout serenity born of hope and faith he persevered and was always the first to arrive. | வேட்டையாடுவதை விட்டுவிட்ட அவர் தனது கடந்த கால வாழ்கையை நினைத்து பார்ப்பதிலும் பசுமை நிறைந்த வயல்வெளிகளை கண்டுகளிப்பதிலும் தனது எல்லா நேரத்தையும் செலவிட்டார். அண்டம் முழுவதும் அன்பால் கட்டப்பட்டுள்ளது என்பதையும் பிரிவு என்ற துயரத்திலிருந்து எவருமே தப்பிக்க முடியாது என்பதையும் மிகவும் ஆழ்ந்து யோசித்து இறுதியாக உணர்ந்தார். இதை கண்டு உணர்ந்ததும் ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து அவர் கண்ணீர் விட்டு மனம் வெறுத்து அழுதார். அந்த நாளிலிருந்து தினமும் அதிகாலை 4 மணிக்கு எழுந்து அஞ்சல் அலுவலகம் செல்வதை வாடிக்கையாகக் கொண்டிருந்தார். அவரது வாழ்கையில் எப்போதும் எந்த ஒரு கடிதத்தையும் பெறவில்லை. ஆனால் அமைதியான பக்தியில் உருவான நம்பிக்கையுடனும், உண்மையுடனும் அவர் விடாமல் தொடர்ந்து அஞ்சல் அலுவலகத்திற்கு முதல் ஆளாக வந்தார். |
| As Ali waited, peons would come for their firms' letters - these smart young peons in their spotless turbans and creaking shoes were always eager to express themselves. With great enthusiasm they would exchange news from their various offices. One day, Ali was there as usual and did not move from his seat when the door was opened. | அலி காத்திருக்கும் வேளையில் அலுவலகப் பணியாளர்கள் தங்களது நிறுவனங்களின் கடிதங்களைப் பெறுவதற்காக வருவார்கள். அந்த சுத்தமான தலைப்பாகை மற்றும் சத்தமெழுப்பும் காலணி (ஷு) அணிந்து வரும் அழகிய பணியாளர்கள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் வாழ்த்திக் கொள்வார்கள். மிகுந்த உற்சாகத்துடன் தங்களது பல்வேறு அலுவலகங்கள் தொடர்பான செய்திகளை அவர்கள் பரிமாறிக் கொள்வார்கள். ஒரு நாள் அலி அங்கே வழக்கம் போல அமர்ந்தார். அஞ்சல் அலுவலகக் கதவு திறந்திருந்த போதும் அவர் எழவில்லை. |
| "Police Commissioner!"the  clerk called out, and a young fellow stepped forward briskly for the letters. "Superintendent! Another voice called. Another peon came. And so the clerk, like a worshipper of Vishnu, repeated his customary thousand names. | "காவல் துறை ஆய்வாளர்" என்று அந்த எழுத்தர் கூப்பிட்டதும் ஒரு இளைஞன் சுறுசுறுப்புடன் கடிதங்களை வாங்குவதற்காக உள்ளே சென்றான். "கண்காணிப்பாளர்" என்று மறுமுறைக் குரல் கேட்டதும் மற்றொரு பணியாளர் வந்தார். இதே போல அந்த எழுத்தர் கடவுள் விஷ்ணுவை மந்திரம் சொல்லி அழைப்பவர் போல தொடர்ச்சியாக வழக்கமாக தான் கூறும் ஆயிரம் பெயர்களை சொல்லிக் கொண்டே இருந்தார். |
| At last they had all gone. Ali got up too and saluting the post-office as though it housed some precious relic, went off, a pitiable figure, a century behind his time. | இறுதியில் அனைவரும் சென்று விட்டனர். அந்த அலுவலகக் கட்டிடம் அவருடைய காலத்துக்கு ஒரு நூற்றாண்டு பழைமையானதாய் மதிப்பு மிக்க நினைவுச் சின்னங்களைக் கொண்டிருந்ததால் அலி எழுந்து நின்று அதற்கு வணக்கம் செலுத்தி விட்டு ஒரு பாவப்பட்ட உருவமாக வெளியேறினார் |
| "That fellow", asked the post-master, "is he mad?" | "அந்த ஆள்" என்று (அலியைச் சுட்டிகாட்டி) சொன்ன அஞ்சல் அலுவலர் "அவன் பைத்தியமா? என்றார். |
| "Who sir? Oh, yes" answered the clerk, "He has been here every day for the last five years. But he doesn't  get any letters. | "யார் ஐயா? ஓ, ஆமாம்" என்ற அந்த எழுத்தாளர், "கடந்த 5 வருடங்களாக தினமும் இங்கே வந்துகொண்டிருக்கிறான் ஆனால் அவனுக்கு கடிதங்கள் எதுவும் வரவில்லை" என்றார். |
| "Who does he think will have time to write a letter every day?" | "தினமும் அவனுக்கு கடிதம் எழுத யாருக்கு நேரம் இருக்கும் என்று நினைக்கிறான்?" (என்றார் அஞ்சல் அலுவலர்) |
| "But he is a bit mad, sir. In the old days he committed many sins; and maybe he shed some blood within some sacred **precincts** and is paying for it now," the postman added in support of his statement. | "ஆனால் அவன் கொஞ்சம் பைத்தியம் ஐயா. அந்தக் காலத்தில் அவன் பல பாவங்களைச் செய்தவன். புனித இடங்களில் இரத்தம் சிந்தச் செய்து தற்போது அவற்றின் எல்லைகளுக்கான விலையை அவன் தந்து கொண்டிருக்கலாம்." என்று தபால்காரர் தன் கருத்தினை விளக்கினார். |
| "Madmen are strange people," the postmaster said. | "பைத்தியங்கள் வினோதமான மனிதர்கள்" என்றார் அஞ்சலகர். |
| For several days Ali had not come to the post office. Everyone wondered why, but no one cared enough to find out the reason. At last he came again; but it was a struggle for him to breathe and on his face were clear signs of approaching end. That day he could not contain his impatience. | (அதன் பின்) பல நாட்களாக அலி அஞ்சல் அலுவலகத்திற்கு வருவதில்லை. ஏன் என்று அனைவரும் ஆச்சரியப்பட்டனர். ஆனால் எவருக்கும் அதற்கான காரணம் அறிய அக்கறையில்லை. இறுதியில் ஒரு நாள் அவர் மீண்டும் வந்தார். அவருக்கு மூச்சு விடுவது சிரமமாக இருந்தது. முடிவு நெருங்கி விட்டதற்கான அறிகுறிகள் தென்பட்டன. அந்த நாள் அவரால் தன் பொறுமையின்மையை அடக்க முடியவில்லை. |

| | |
|---|---|
| "Master Sahib," he begged the post master, "Have you a letter from my Miriam?" | "மாஸ்டர் ஷாகிப்" என அஞ்சல் அலுவலரிடம் கெஞ்சிக் கேட்டார். "என் மிரியத்திடம் இருந்து கடிதம் வந்துள்ளதா"? |
| The post master wanted to get out to the country, and was in a hurry. "What a pest you are, Bhai!" he exclaimed **haughtily.** | அந்த அஞ்சல் அலுவலர் அந்த ஊரிலிருந்து கிளம்பும் அவசரத்தில் இருந்தார். "எவ்வளவு தொந்தரவு நீ, பாய்!" என்று மூர்க்கமாய் ஆச்சரியப்பட்டார். |
| "My name is Ali", answered Ali absent-mindedly. "I know! I know! But do you think we've got your Miriam's name registered?" | "எனனுடைய பெயர் அலி" என்று அலி சுயநினைவின்றி பதில் சொன்னார். "எனக்கு தெரியும்! எனக்கு தெரியும்! ஆனால் உன்னுடைய (மகள்) மிரியத்தின் பெயரை நாங்கள் பதிவு செய்து வைத்திருக்கிறோம் என்று நினைக்கிறாயா?" |
| "Then please note it down, brother. It will be useful if a letter should come when I am not here." For how should the villager who had spent three-quarters of his life hunting know that Miriam's name was not worth a pie to anyone but her father? | "அப்படி என்றால் அவள் பெயரை பதிவு செய்து கொள்ளுங்கள் சகோதரரே. நான் இங்கே வராத நேரத்தில் அவளிடமிருந்து கடிதம் வந்தால் உதவியாய் இருக்கும்" (என்றார் அலி). வேட்டையாடுவதிலேயே தன் வாழ்நாளின் மூன்று கால் பகுதியை தொலைத்த ஒருவரது மகளான மிரியம்மின் பெயரை தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் திணையளவு கூட வேறு எவருக்கும் உபயோகம் இராது, ஆனால் அவள் தந்தைக்கு…? |
| The postmaster was beginning to lose his temper. "Have you no sense?" he cried. "Get away! Do you think we're going to eat your letter when it comes?" and he walked off hastily. | அந்த அஞ்சல் அலுவலர் தனது இயல்பு நிலையை இழக்கத் தொடங்கி விட்டார். "உனக்கு அறிவில்லையா?" என்று கத்தினார். "கிளம்பு! உன்னுடைய கடிதம் வந்தால் அதை நாங்கள் தின்றா விடுவோம்?" என்று சொல்லிக் கொண்டே அவசரமாக வெளியே நடந்தார். |
| Ali came out very slowly, turning after every few steps to gaze at the post office. His eyes were filled with tears of helplessness, for his patience was exhausted, even though he still had faith. Yet how could he still hope to hear from Miriam? | அலி மெதுவாக வெளியே வந்தார். ஒவ்வொரு அடி எடுத்து வைக்கையிலும் அந்த அஞ்சல் அலுவலகத்தை திரும்பி பார்த்துக் பெருமூச்சு விட்டு கொண்டே சென்றார். அவர் பொறுமை இழந்ததால், அவரது கண்கள் ஆதரவின்மையின் கண்ணிர்துளிகளால் நிரம்பி இருந்தது. இருந்தாலும் அவருக்கு நம்பிக்கை இருந்தது. இருப்பினும் மிரியத்திடமிருந்து கடிதம் வரும் என்று இன்னும் எப்படி நம்புகிறார்? |
| Ali heard one of the clerks coming up behind him, and turned to him. "Brother!" he said. The clerk was surprised, but being a decent fellow he said, "Well!" | அங்கிருந்த எழுத்தர்களில் ஒருவர் தன் பின்னால் வருவதைக் கண்ட அலி திரும்பிப் பார்த்து "சகோதரரே!" என்றார். அந்த எழுத்தர் ஆச்சரியப்பட்டார். ஆனால் சற்று நாகரிகமானவராக இருந்ததால் "நல்லது (சொல்லுங்கள்)" என்றார். |
| "Here, look at this!"and Ali produced an old tin box and emptied five golden **guineas** into the surprised clerk's hands. "Do not look so startled," he continued, "They will be useful to you, and they can never be to me. But will you do one thing?" | "இதோ இதைப் பாருங்கள்" சொல்லிக் கொண்டே ஒரு பழைய தகர டப்பாவை கொட்டி ஐந்து தங்கக் காசுகளை (கினியாஸ்-அந்த கால இங்கிலாந்து நாணயம்) அந்த ஆச்சரியப்பட்ட எழுத்தரின் கைளில் கொடுத்தார். "அதிர்ச்சி அடைய வேண்டாம்" என்ற அவர், "அவைகள் உங்களுக்கு உதவும், எனக்கு அவை (இனி) ஒருபோதும் பயன்படப் போவதில்லை, ஆனால் எனக்காக ஒன்று செய்ய முடியுமா? " தொடர்ந்து அலி கேட்டார். |
| "What?" "What do you see up there?" said Ali, pointing to the sky. "Heaven." | "என்ன?" என்ற எழுத்தரிடம் "மேலே அங்கே என்ன பார்க்கிறீர்கள்?" வானத்தை காட்டி "சொர்க்கம்" என்றார் அலி. |
| "Allah is there, and in His presence I am giving you this money. When it comes, you must forward Miriam's letter to me." | "அல்லா அங்கே இருக்கிறார் அவருடைய முன்னிலையில் இந்தப் பணத்தை உங்களிடம் தருகிறேன். மிரியமின் கடிதம் வந்தால் அதை என்னிடம் சேர்க்க வேண்டும்" என்றார் அலி. |
| "But where - where am I supposed to send it?" asked the utterly bewildered clerk. "To my grave." | "ஆனால் எங்கே வந்து அதை நான் உங்களிடம் சேர்ப்பது?" என்று குழப்பத்துடன் அந்த எழுத்தர் கேட்டார். "என்னுடைய கல்லறையில்"(என்றார் அலி) |
| "What?" | "என்ன?" (என்றார் எழுத்தர்) |
| "Yes. It is true. Today is my last day, my very last, alas! And I have not seen Miriam. I have had no letter from her." There were tears in Ali's eyes as the clerk slowly left him and went on his way with the five golden guineas in his pocket. | "ஆம். உண்மை. இதுதான் எனது கடைசிநாள். மிகவும் கடைசிநாள். ஐயோ! என்னால் மிரியமைப் பார்க்க முடியவில்லை. அவளிடமிருந்து என்னால் எந்த கடிதத்தையும் பெற முடியவில்லை" என்ற அலியின் கண்களில் கண்ணீர் வர அந்த எழுத்தர் அந்த 5 நாணயங்களை அவரது சட்டைப் பையில் வைத்துக் கொண்டு தன் வழியே கிளம்பினார். |
| Ali was never seen again, and no one troubled to inquire after him. | அலி அதற்கு பின்னர் தென்படவே இல்லை. எவரும் அலியைப் பற்றி கஷ்டப்பட்டு விசாரிக்கவும் இல்லை. |

| | |
|---|---|
| One day, however, trouble came to the postmaster. His daughter lay ill in another town, and he was anxiously waiting for news of her. The post was brought in, and the letters piled on the table. Seeing an envelope of the colour and shape he expected, the postmaster eagerly snatched it. It was addressed to Coachman Ali and he dropped it as though it had given him an electric shock. He knew at once that this was the letter the old man had been waiting for: it must be from his daughter Miriam. | ஒரு நாள் அந்த அஞ்சல் அலுவலருக்கு ஒரு துன்பம் வந்தது. பக்கத்து நகரத்திலிருந்த அவர் மகள் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையானார். அவள் பற்றிய தகவலுக்காக அவர் கவலையுடன் காத்திருந்தார். வழக்கமாக வரும் கடிதங்கள் அலுவலகத்திற்கு வந்ததும் அவைகள் மேசையில் கொட்டப்பட்டன. அவர் அவரது மகளிடமிருந்து எதிர்பார்த்த கடிதத்தின் வண்ணம் மற்றும் வடிவம் போலவே இருந்த ஒரு கடிதத்தை ஆர்வத்துடன் எடுத்தார். (ஆனால்) அந்தக் கடிதம் வண்டிக்காரன் அலியின் விலாசத்தைக் கொண்டிருந்தது. அவருக்கு அது மிகவும் ஆச்சிரியம் மற்றும் அதிர்ச்சியை அளித்தது. அந்தக் கடிதத்தை அவர் கீழே போட்டார். இவ்வளவு காலமாக காத்துக் கொண்டிருந்த அந்த முதியவருக்கு வந்த கடிதம் என்பதை அவர் புரிந்து கொண்டார். அது அவர் மகள் மிரியத்திடம் இருந்துதான் வந்திருக்கும் என்பதை யூகித்து அறிந்தார். |
| "Lakshmi Das!" called the postmaster, for such was the name of the clerk to whom Ali had given his money. "Yes sir?" | "லட்சுமி தாஸ்" என்று அஞ்சல் அலுவலர் கூப்பிட்டார். அலி பணம் கொடுத்த அந்த எழுத்தரின் பெயர்தான் அது. "சொல்லுங்கள் ஐயா?" (என்றார் அந்த எழுத்தர்) |
| "This is for your old coachman, Ali. Where is he now?" "I will find out, sir." | "இந்தக் கடிதம் உனது முதிய வண்டிக்காரன் அலிக்கு வந்துள்ளது. அவர் இப்போது எங்கு இருப்பார்?" (என்றவரிடம்) "நான் கண்டுபிடிக்கிறேன், ஐயா" (என்றார் அந்த எழுத்தர்) |
| The postmaster did not receive his own letter all that day. He worried all night, and getting up at three, went to sit in the office. "When Ali comes at four o' clock," he mused "I will give him the letter myself." | அன்று அந்த அஞ்சல் அலுவலகத்திற்கு வர வேண்டிய தனது கடிதம் வரவே இல்லை. இரவு முழுவதும் கவலைப்பட்டார். அதிகாலை 3 மணிக்கு எழுந்து அலுவலகத்தில் போய் அமர்ந்து கொண்டார். "அலி அதிகாலை 4 மணிக்கு வரும்போது அவரிடம் நானே இந்தக் கடிதத்தை கொடுப்பேன்." என்று முணுமுணுத்தார் அஞ்சல் அலுவலர். |
| After spending a single night in suspense, anxiously waiting for news of his daughter, his heart was brimming with sympathy for the poor old man who had spent his nights in the same suspense for the last five years. | தன் மகளிடமிருந்து வரவேண்டிய கடிதத்திற்காக கவலையுடனும் பரபரப்புடனும் ஒரு இரவு முழுவதையும் தூங்காமல் புதிருடன் கழித்த பின்புதான், இதே கவலையுடன் கடந்த ஐந்து ஆண்டுகளாக பல இரவுகளை கழித்த அந்த ஏழை முதியவருக்காக அவருடைய இதயம் அனுதாபத்தால் கனத்தது. |
| At the stroke of five he heard a soft knock on the door: he felt sure it was Ali. He rose quickly from his chair, his suffering father's heart recognizing another, and flung the door wide open. | ஐந்து மணியளவில் அஞ்சல் அலுவலக அறைக்கதவு மெதுவாக தட்டப் படுவதைக் கேட்டார், அது அலிதான் என்று உணர்ந்தார். தனது இருக்கையிலிருந்து விரைந்து எழுந்தார். கவலையுடனிருக்கும் அவருடைய தந்தை இதயம் மற்றோரு தந்தையின் இதயத்தை புரிந்து கொண்டது. கதவினை அகலமாக திறந்து வைத்தது. |
| "Come in, Brother Ali," he cried, handing the letter to the meek old man, bent double with age, who was standing outside. Ali was leaning on a stick, and the tears were wet on his face as they had been when the clerk left him. He lifted his eyes and in them was a light so unearthly that the postmaster shrank back in fear and astonishment. | "உள்ளே வாருங்கள், சகோதரர் அலி!" என்று உரக்கக் கூறி வயதால் கூன்விழுந்து வெளியே பணிவுடன் நின்று கொண்டிருந்த எளிய முதியவரிடம் அந்தக் கடிதத்தை தந்தார். முன்னொரு நாள் அலி கையில் கைத்தடியில் சாய்ந்தபடி, முகத்தை கண்ணீர் நனைக்க, எழுத்தரிடமிருந்து விடைபெற்ற அதே நிலையில் நின்று கொண்டிருந்தார். அவர் கண்களை உயர்த்தி பார்க்கையில் அவரது கண்களுக்குள் தேடிக் கண்டறிய இயலாத வித்தியாசமான ஒளி ஒன்று தோன்றியது. அந்த ஒளி அஞ்சல் அலுவலரை பயத்தினாலும் ஆச்சயத்தாலும் பின்வாங்க வைத்தது. |
| Hearing the postmaster's voice, the clerk came out. | அஞ்சல் அலுவலரின் குரல் கேட்டு (அலுவலகத்தின் உள்ளிருந்த) எழுத்தர் வெளியே வந்தார். |
| The postmaster did not answer. He just stood there staring at the door from which Ali had disappeared. At last he turned to Lakshmi Das. "I was speaking toAli," he said. | அஞ்சல் அலுவலரால் பதில் பேச முடியவில்லை. அவர் அலி மறைந்து போன கதவினை நோக்கி வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார். கடைசியில் லெட்சுமி தாஸை நோக்கி திரும்பி "நான் அலியுடன் பேசிக் கொண்டிருந்தேன்" என்றார். |
| "Old Ali is dead, sir. But give me his letter."<br>"What! But when? Are you sure, Lakshmi Das? | "வயதான அலி இறந்து விட்டார் ஐயா. அவரது கடிதத்தை என்னிடம் கொடுங்கள்" (என்றார் எழுத்தர்). "என்ன? ஆனால் எப்போது? உறுதியாக தெரியுமா லெட்சுமி தாஸ்?" |

| | |
|---|---|
| "Yes, that is so," broke in a postman who had just arrived. "Ali died three months ago." | "ஆமாம் அப்படிதான்," தபால்காரர் உள்ளே வந்து கொண்டே "அலி மூன்று மாதத்திற்கு முன்பே இறந்து விட்டார்." என்றார். |
| Miriam's letter was still lying near the door. Ali's image was still before his eyes. He listened to Lakshmi Das' recital of the last interview, but he could still not doubt the reality of the knock on the door and tears in Ali's eyes. He was **perplexed.** Had he really seen Ali? Had his imagination deceived him? Or had it perhaps been Lakshmi Das? | மிரியமின் கடிதம் கதவருகிலேயே இன்னும் கிடந்தது. அலியின் உருவம் இன்னும் அவர் கண் முன் நின்றது. லெட்சுமி தாஸ்சுடன் கடைசியாக உரையாடியதை நினைத்து பார்த்தார். ஆனால் கதவு தட்டப்பட்டதும் கண்ணில் நீர் வழிய அலி நின்றதும் அனைத்தும் உண்மை என்பதுபோலவே சந்தேகமாக இருந்தது. அஞ்சலக அலுவலர் குழப்பமடைந்தார் உண்மையில் அவர் அலியைதான் பார்த்தாரா? அவரது கற்பனை அவரை ஏமாற்றியதா? அல்லது ஒரு வேலை அது லட்சுமி தாஸா? |
| The daily routine began. The clerk read out the addresses – Police Commissioner, Superintendent, Librarian –and flung letters deftly. | தினசரி நடவடிக்கைகள் வழக்கம் போல தொடங்கியது. அந்த எழுத்தர் முகவரிகளைப் படித்தார். காவல்துறை ஆய்வாளர், கண்காணிப்பாளர், நூலகர் என கடிதங்கள் திறமையாக வீசப்பட்டன. |
| -Adapted from "Miriam's Letter" by Dhumketu | தூம்கேதுவின் 'மிரியம்ஸ் லெட்டர்' கதையிலிருந்து எடுக்கப்பட்டது. |
| Dhumketu (1892-1965) is the pen name of Gowrishankar Govardhandas Joshi, a prolific writer, who is considered one of the pioneers of the Gujarati short story. He published twenty four collections of short stories, thirty two novels, plays and travelogues. His style is very poetic and romantic in depicting powerful human emotions. "Miriam's Letter" was translated by Mira Naik. It was first published in Contemporary Indian Short Stories Series I by Sahitya Academy in 1959 | தூம்கேது என்பது சிறந்த படைப்பாற்றல் எழுத்தாளர் கௌரிசங்கர் கோவர்தன்தாஸ் ஜோஸி என்பவரது புனைப்பெயர். குஜராத்திய சிறுகதைகளின் தந்தையர்களில் ஒருவர். இவர் 24 சிறுகதைத் தொகுப்புகள், 32 நாவல்கள். நாடகங்கள் மற்றும் பயணக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். கவிதை மற்றும் கற்பனைகள் மூலம் வலிமையான மனித உணர்வுகளை வெளிப்படுத்துவது இவர் பாணி. மீரா நாயக் என்பவரால் 'மிரியம்ஸ் லெட்டர்' ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டது. இது முதன் முதலில் சாகித்திய அகாடமியால் 1959 ல் நவீன இந்திய சிறுகதைகள் வரிசை 1 என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. |

## Synonyms:-

| Word | தமிழ் அர்த்தம் | Synonym |
|---|---|---|
| acquired | பெறு | obtained |
| accustomed to | பழக்கமாகிப்போதல் | habituated / got used to |
| stared | வெறித்துப்பார் | gazed |
| anxiously | மிக்க ஆர்வமாக | eagerly |
| instinct | உள்ளுணர்வு | intuition |
| caressing | அன்பான மென்மையான தொடுதல் | touching gently and lovingly |
| squat | குதிகால்கள் மீது அமர்தல் (குந்துகாலிடுதல்) | sit down on the heels |
| composed | அமைதி | calm, quiet |
| partidge | ஒருவகையான பறவை | a kind of bird |
| exhausted | கடின உழைப்பால் களைத்துப்போதல் | used completely |
| tattered | கந்தல் | ragged |
| inhabitants | குடியிருப்பவர்கள் | residents, dwellers |
| plodded | சிரமத்துடன் நடப்பது | walked heavily |
| gleamed | ஒளிர்தல் | glowed |
| crevices | குறுகிய திறப்பு | narrow openings |
| faintly | தெளிவில்லாமல் | indistinctly |
| obsession | மனதில் நிரம்பிய | idea or feeling occupies the mind |
| bewildered | குழப்பமான | confused |
| bereft | தனிமையில் | lonely/abandoned |
| serenity | அமைதியான | calmness |
| relic | ஞாபகார்த்தம் | a momento |
| precinct | எல்லை | a boundary |
| haughtily | மூர்க்கத்தனமாய் | arrogantly |
| guineas | பழைய இங்கிலாந்து நாணயங்கள் | old british coins |
| mused | நினைவு கூர்தல் | thought |
| perplexed | குழப்பமடைதல் | puzzled greatly |

## Antonyms:-

| Word | | | Antonym | |
|---|---|---|---|---|
| early | விரைவாக | X | late | தாமதமாக |
| profound | ஆழமான | X | superficial | மேலோட்டமான |
| quickly | வேகமாக | X | slowly | மெதுவாக |
| quietly | அமைதியாக | X | noisily | சத்தமிட்டுக்கொண்டு |
| serenity | அமைதியாக | X | anxiety | பரபரப்பாக |
| cold | குளிர்ச்சியான | X | hot | சூடான |
| public | பொது | X | private | தனியார் |
| new | புதிய | X | old | பழைய |
| love | அன்பு | X | hate | வெறுப்பு |
| heaven | சொர்க்கம் | X | hell | நரகம் |
| worry | கவலை | X | joy | இன்பம் |
| separation | பிரிவு | X | unification | இணைவு |
| conclusion | முடிவு | X | start / beginning | தொடக்கம் |
| struggle | போராட்டம் | X | peace | அமைதி |
| slowly | மெதுவாக | X | fast/hurriedly | வேகமாக |
| arrive | வந்துசேர் | X | depart | கிளம்பு |
| receive | பெற்றுக்கொள் | X | send | அனுப்பு |
| faith | நம்பிக்கை | X | mistrust | நம்பிக்கையின்மை |
| unearthly | மறைமுகமான | X | acceptable | ஏற்றுக்கொள்ளக்கூடிய |
| shrink | சுருங்குதல் | X | grow | வளருதல் |

## Important Questions:

1. What was Coachman Ali's favourite sport?
   **Hunting** was Coachman Ali's favourite sport.
2. Why did he give up hunting?
   **The separation of his daughter made him to realize the meaning of love and separation.** So he gave up hunting.
3. Why did the Post Master call Ali "a pest"?
   **Ali disturbed the Post Master daily**. So he called him "a pest".
4. Why did the men at the post office mock at Ali?
   **Ali didn't get any letter for the past five years**. **But he used to come to the post office every morning**. So the men at the post office mocked at him.
5. Why did Coachman Ali find no use for money?
   Ali thought that **he was going to die soon**. So he found no use for money.
6. What made the postmaster understand the feelings of Ali?
   **The waiting for a letter from his ill daughter made the Postmaster to undertand the feelings of Ali.**

## Other Questions:

1. Which part of the day is the story set?
   The story is set **at dawn** (**early morning**).
2. Why were the streets deserted?
   The streets were deserted **because of very cold and biting wind**.
3. How good was he at hunting?
   He can **hunt a partridge** at the **very sight**.
4. What made Coachman Ali realize the pangs of separation?
   The **separation of his daughter** Miriam after her marriage made Ali to realize the pangs of separation.
5. Why did Coachman Ali cry bitterly?
   When **he realized that the grief of separation and love was inescapable,** he cried bitterly.
6. Can money alone get what we need in life?
   **No**. Money alone can't get what we need in life.
7. Comment on the behaviour of Lakshmi Das.
   Lakshmi Das was the clerk who **patiently listened Ali's last words**. He was a decent fellow. He **assured to deliver Ali's letter at his graveyard**.

8. What caused the change of attitude of the Postmaster towards Ali?

The Postmaster realised that **Ali's love with his daughter Miriam** was also **equal to** that of **his love with his daughter.** So he changed his attitude towards Ali.

**General Paragraph Qustion:**

**1. Narrate the story of coachman Ali.**

| | |
|---|---|
| **Lesson** | **: Mirriam's letter** |
| **Author** | **: Dhumketu** |
| **Theme** | **: A father's love for his daughter.** |
| **Characters** | **: Coachman Ali, Postmaster, Clerk Laksmi Dass, Postman.** |
| **Outline** | **: Coachman Ali as a hunter – Daughter Miriam's separation – Ali visited post office - expecting a letter from her – for five years - ill treated by the Postmaster – Ali's last day – asked the clerk to send letter to grave – Postmaster had a similar situation – realized Ali's feelings – Miriam's letter came – Postmaster's dream.** |

Coachman Ali was a hunter. Miriam was his daughter. She married and left him. As a hunter, he couldn't realise the meaning of love and separation. Later the separation of her daughter made him to realise love and the grief of separation. He had been waiting for a letter from her for five years. He was ill treated by the Post Master. And at last, he requested the clerk in the post office to hand over the letter to his graveyard. Once the postmaster was waiting for a letter from his sick daughter. He didn't get it. Now only he realised the feelings of Coachman Ali. On that day he saw a letter from Miriam to Ali. He wanted to handover it to Ali. He felt that Ali was knocking the door. He handed him over the letter and talked with him. Sometimes later the clerk asked the postmaster whom he had talked with. The postmaster replied that it was Ali. But the clerk told that Ali was dead three months before.

**"To a father growing old, nothing is dearer than his daughter"**

**For slow learners:**

*** Coachman Ali was a hunter.**
*** He had been waiting for his daughter Miriam's letter for five years.**
*** The postmaster and others teased him.**
*** Ali requested the clerk to deliver the letter to his grave.**
*** The Postmaster also experienced the similar situation .**
*** Then only he realised the feelings of Ali.**
*** He saw the letter from Miriam to Ali.**
*** Next morning he delivered him the letter, but in his imagination.**
*** Because Ali died three months before.**

குறிப்புகள்:
coachman–வண்டிக்காரன், hunter–வேட்டைக்காரன், separation–பிரிவு, ill-treated-கேவலமாக நடத்து, graveyard – கல்லறை, realised–உணர்ந்துகொள்ளுதல், handover–கொடு, knocking – கதவு தட்டப்படுதல்.

# Poem: A Sonnet for my Incomparable Mother
## (நிகரற்ற என் அம்மாவுக்கு ஒரு பாடல்) – F. Joanna

| L.No | Poem Lines | தமிழாக்கம் |
|---|---|---|
| 1 | I often contemplate my childhood, Mom. | நான் அடிக்கடி என் குழந்தைப்பருவ நினைவுகளில் மூழ்கிப்போகிறேன். அம்மா. |
| 2 | I am a mother now, and so I know | நான் இப்போது அம்மா, அதனால் எனக்குத் தெரிகிறது. |
| 3 | Hard work is mixed together with the fun; | கடின வேலை கேளிக்கையோடு கலக்கப்படுகிறது. |
| 4 | You learned that when you raised me long ago. | நீ ஒரு காலத்தில் என்னை வளர்த்தத போது கற்றுக்கொண்டாய். |
| 5 | I think of all the things you gave to me: | நீ எனக்களித்த அனைத்து விசயங்களையும் நினைத்துப்பார்க்கிறேன். |
| 6 | Sacrifice, devotion, love and tears, | தியாகம், பிரமாணிக்கம் (பக்தி), அன்பு மற்றும் கண்ணீர் |
| 7 | Your heart, your mind, your energy and soul-- | உனது இதயம், உனது மனம், உனது சக்தி மற்றும் உனது ஆன்மா --- |
| 8 | All these you spent on me throughout the years. | இவைகள் அனைத்தையும் ஆண்டுகள் (வாழ்நாள்) முழுவதும் நீ செலவழித்தாய். |
| 9 | You loved me with a never-failing love | ஒருபோதும் தளராத அன்புடன் நீ என்னை அன்பு செய்தாய் |
| 10 | You gave me strength and sweet security, | நீ எனக்கு வலிமையளித்தாய். இனிய பாதுகாவலாய் இருந்தாய் |
| 11 | And then you did the hardest thing of all: | பிறகு நீ அனைத்திலும் கடுமையான செயல் ஒன்றை செய்தாய் |
| 12 | You let me separate and set me free. | நான் உன்னடமிருந்து பிரிந்து தனித்து வாழ, சுதந்திரமாக வாழ அனுமதித்தாய் |
| 13 | Every day, I try my best to be | ஓவ்வொரு நாளும், நான் என்னால் முடிந்தவரை முயற்சிக்கிறேன் |
| 14 | A mother like the mom you were to me. | ஒரு தாயாக, நீ எனக்கு (தாயாக) இருந்தது போல. |

(Sonnet – 14 வரிகளில் எழுதப்படும் பாடல்)

**Comprehension questions:**

***1. I often contemplate my childhood, mom***
***I am a mother now, and so I know***

a) Who contemplates?
**The poet (F. Joanna)** contemplates.

b) What does the poet contemplate?
The poet contemplates **her childhood days**.

c) Is the speaker still a child?
**No,** the speaker is a **mother now**.

d) With whom does the poet speak?
The poet speaks **with her mother**.

***2. Hard work is mixed together with the fun***
***You learned that when you raised me a long ago.***

a) What was learned by the poet?
The poet learned **that her mother enjoyed hard work.**

b) Who raised whom?
**The mother raised her daughter.**

c) When did the mother raise her daughter?
The mother raised her daughter **long ago**.

***3. I think of all the things you gave me:***
***Sacrifice, devotion, love and tears***

a) Whom does 'I' refer to?
'I' refers to **the poet**.

***4. Your heart, your mind, your energy and soul***
***All these you spent on me throughout the years.***

a) What did the mother spend on her child?
The mother spent **her heart, mind, energy and soul** on her child.

b) Does the mother give everything in a single day?
No, the mother took **many years**.

***5. You loved me with a never-failing love.***
***You gave me strength and sweet security.***

a) What kind of love did the mother give?
The mother gave **a never-failing love.**

b) What else did the mother give to her child?
The mother gave **strength and sweet security.**

***6. And then you did the hardest thing of all.***
***You let me separate and set me free.***

a) What is the hardest thing of all?
The mother's **permission to her child to go away from her** is the hardest thing of all.

b) Why it is the hardest thing?
It is the hardest thing because the mother **taking the risk of letting her daughter free.**

c) Who did the hardest thing?
**The mother** did the hardest thing.

d) For whom the mother did the hardest thing?
**For her daughter** the mother did the hardest thing.

## Literary Appreciation:

1. ***I often contemplate my childhood, Mom.***
***I am a mother now, and so I know***
***Hard work is mixed together with the fun;***
***You learned that when you raised me long ago.***

a) What is the rhyme scheme of these lines?

The rhyme scheme of these lines is ***abcb.***

b) Pick out the rhyming words in these lines?

The rhyming words are ***know*** and ***ago***.

c) Pick out the words that alliterated in these lines.

**m**y- **m**om, **l**earned- **l**ong are alliterated.

2. ***I think of all the things you gave to me:***
***Sacrifice, devotion, love and tears,***
***Your heart, your mind, your energy and soul—***
***All these you spent on me throughout the years.***

a) What is the rhyme scheme of these lines?

The rhyme scheme of these lines is ***abcb.***

b) Pick out the rhyming words in these lines?

The rhyming words are ***tears*** and ***years***.

c) Pick out the words that alliterated in these lines.

**Y**our heart- **y**our mind- **y**our energy

3. ***Every day, I try my best to be***
***A mother like the mom you were to me.***

a) Pick out the rhyming words in these lines?

The rhyming words are ***be*** and ***me***.

b) What is the figure of speech employed here?

***Simile*** is the figure speech employed here.

| | |
|---|---|
| ***I often contemplate my childhood, Mom.***<br>***I am a mother now, and so I know***<br>***Hard work is mixed together with the fun;***<br>***You learned that when you raised me long ago.***<br>**Rhyming words & Rhyming scheme கண்டுபிடிப்பது** எப்படி?<br>• பாடல் வரிகளின் கடைசி வார்த்தைகளை கவனிக்கவும்.<br>• ஒரே மாதிரியான உச்சரிப்பைக் கொண்டுள்ள வார்த்தைகளை எடுத்து எழுதுங்கள்.<br>எடுத்துக்காட்டாக இரண்டாம் அடியில் உள்ள know-ம் மூன்றாம் அடியில் உள்ள ago-ம் ஒரே மாதிரியான உச்சரிப்பைக் கொண்டுள்ளன<br>எனவே இந்த பாடல் வரிகளில்<br>Rhyming words: know-ago ஆகும். | **Rhyming scheme கண்டுபிடிப்பது** எப்படி?<br>• பாடல் வரிகளின் கடைசி வார்த்தைகளை உற்று நோக்குங்கள்.<br>• முதல் அடியில் வரும் Mom-ஐ a எனக் கொள்க.<br>• அடுத்த அடியில் வரும் know-ஐ b எனக் கொள்க.<br>• அடுத்த அடியில் வரும் fun-ஐ c எனக் கொள்க.<br>• நான்காம் அடியில் வரும் ago–ன் உச்சரிப்பும் இரண்டாம் அடியில் உள்ள know–ன் உச்சரிப்பும் ஒன்று போலவே உள்ளது. எனவே அதனையும் b எனக் கொள்க.<br>அனைத்தையும் சேர்த்து எழுத abcb என வருகிறது. அதுவே Rhyming scheme ஆகும். |

## Paragraph:

**1. How does the poet express her love for her mother?**

**Poem : A Sonnet for my Incomparable Mother**
**Poet : F. Joanna**
**Theme : Reminiscences of the poet's mother.**

The poet F. Joanna speaks about her mother in this poem. She recollects her childhood days. Now she is also a mother. Mother's love is incomparable. She understood how her mother struggled to brought up her. She learnt that her mother enjoyed 'hard work'. She gave her child sacrifice, devotion, love and tears. She spent her heart, mind, energy and soul on her child. She gave a never-failing love. She gave strength and sweet security. Then the mother allowed her daughter to go away from her. It was the hardest thing of all. The poet tries to be a mother like her mother. Her own mother is her ideal mother.

**"No one will ever love you like your mother loves you"**

## Slow Learners Paragraph:

* The poet speaks about her mother.
* She recollects her childhood.
* Mother's love is incomparable.
* Her mother enjoyed hard work.
* She gave her child sacrifice, devotion, love and tears.
* She spent her heart, mind, energy and soul on her child.
* She gave a never-failing love.
* She gave strength and sweet security.
* The poet tries to be a mother like her mother.
* Akbar praised Birbal and awarded him.